# பத்திரிக்கைச் செய்தி

**கோவை ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம் இன்று 16.12.2022-ஆம் தேதி திரு.A.பாலசுப்பிரமணியம், உதவியாளர், சின்னியம்பாளையம் ஊராட்சி, கோவை என்பவருக்கு லஞ்சம் கேட்டு பெற்றுக் கொண்ட வழக்கில் விசாரணை முடித்து 2 வருடங்கள் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.5,000/- அபராதம் விதித்து தீர்ப்பு**

கோவை மாவட்டம் சின்னியம்பாளையத்தை சேர்ந்த புகார்தாரர் திரு.ப.சக்திவேல், த/பெ பழனிசாமி என்பவர் 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் குப்பை சுத்தம் செய்த பணிக்கான தனது ஒப்பந்தப்படி காசோலை வழங்குவதற்கு எதிரி திரு.A.பாலசுப்பிரமணியம், உதவியாளர், சின்னியம்பாளையம் ஊராட்சி, கோவை என்பவர் ரூ.500/- லஞ்சமாக கேட்டதால் அவர் மீது கடந்த 12.02.2008ம் ஆண்டு கொடுத்த புகாரின் அடிப்படையில் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு (குற்ற எண். 02/2008/AC/CB, u/s 7 and 13(2) r/w 13(1)(d) of PC Act, 1988ன் படி) எதிரி திரு.A.பாலசுப்பிரமணியம் மீது பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு எதிரியை லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் கடந்த 09.07.2010ம் ஆண்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் இன்று 16.12.2022 மேற்படி வழக்கில் எதிரிக்கு லஞ்சம் கேட்டது மற்றும் வாங்கிய குற்ற செயலுக்காக 2 வருடங்கள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் அபராதமாக ரூ.5000/- விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.